# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>அரசு தானியங்கி பணிமனை வாகனங்கள் தனியாரிடம் பழுதுபார்க்கும் ஒப்பந்தத்தை புதுப்பிக்க லஞ்சம் ரூ.30,000/- கேட்டு பெற்ற உதவி பொறியாளர் மற்றும் சார்ஜ்மேன் ஆகியோர் கைது</u>

புகார்தாரர் திரு.வெங்கடேசன் திருவள்ளுர் மாவட்டம், ஆவடியில் வசித்து வருகிறார். இவர் அரசு தானியங்கி பணிமனையிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் வாகனங்களை தன்னுடைய கடையில் பழுது பார்த்து வந்தார். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் இவருடைய ஒப்பந்தமானது காலாவதியாகி விட்டபடியால் புதிய ஒப்பந்தத்திற்காக அரசு தானியங்கி பணிமனையில் மனு விண்ணப்பத்திருந்தார். மனுவை பரிசீலனை செய்து ஒப்பந்தத்தை புதுப்பிக்க காஞ்சிபுரம் பணிமனையில் உள்ள உதவி பொறியாளர் திரு.மோகன் தனக்கு லஞ்சமாக ரூ.50,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். பின்னர் புகார்தாரரின் வேண்டுதலின்படி ரூ.30,000/-மாக குறைத்துக்கொண்டார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காஞ்சிபுரம் பிரிவில் புகார் மனு ஒன்று அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 27.02.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.மோகன், உதவி பொறியாளர் அவர்களின் உத்தரவின்பேரில் திரு.முரளி, சார்ஜ்மேன், அவர்கள் லஞ்ச பணமான ரூ.30,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# **PRESS NOTE**

## **GOVERNMENT WORKSHOP ASST. ENGINEER AND CHARGEMAN ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.30,000/- FOR RENEWAL OF PRIVATE WORKSHOP CONTRACT**

The complainant Tr.Venkatesan, is residing at Avadi, Thiruvallur District. Complainant running a private workshop and contract with the government workshop for repairing the government vehicle. Two months ago the complainant contract was expired. In this regard the complainant had applied the renewal of the contract at government workshop. For which Tr.Mohan, Assistant Engineer, Government Workshop, Kanchipuram District demanded Rs.50,000/- as bribe for processing his application. Later on the request of the complainant the bribe amount was reduced to Rs.30,000/- . Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Kanchipuram detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 27.02.2023, on the direction of Tr.Mohan, Assistant Engineer, Tr.Murali, Charge Man, Government Workshop, Kanchipuram received the bribe amount of Rs.30,000/- from the complainant. Both accused were arrested.